அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

அ.எண்: 31 /2017
தேதி: 09.03.2017

**யோக கலைக்கு சிறப்பு சேர்த்த 97 வயதான ஞானம்மாள் அவர்களுக்கு**

**அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின்**
**நிறுவனத் தலைவர் ஆர்.சரத்குமார் வாழ்த்து.**

யோக கலையில் சிறந்து விளங்கி இன்று வரை அந்த கலையை வளர்த்துவரும், தமிழகத்தின் நாமக்கல்லை சேர்ந்த 97 வயது நிறைந்த ஞானம்மாள் என்பவருக்கு ஜனாதிபதி அவர்கள் "பெண் சக்தி" விருது வழங்கியிருப்பது அவருக்கு மட்டுமல்ல தமிழ்நாட்டிற்கே பெருமையாகும்.

தன்னுடைய 8 வயதிலிருந்து யோக கலையை கற்றுவரும் இவர், 50-க்கும் மேற்பட்ட ஆசனங்களில் கைதேர்ந்தவர் என்பது பாராட்டுக்குறியது. பரம்பரை பரம்பரையாக இவரது குடும்பம் பயிற்சியில் ஈடுபடுவதுடன், மற்றவர்களுக்கும் பயிற்சியளிக்கின்றனர். மேலும் இவரிடம் யோகாவை கற்றுக்கொண்டவர்கள் உலகின் பல்வேறு இடங்களில் யோக வகுப்புகளை எடுத்துவருவது மகிழ்ச்சியளிக்கின்ற அரிய செயலாகும்.

யோக கலை வயது வரம்பிற்கு அப்பாற்பட்ட உடற்பயிற்சி என்பதை உணரச் செய்திருக்கிறார்கள். எந்த வயதிலும் யோக கலைப் பயிற்சியை மேற்கொள்ளலாம் என்பதை நாம் உணர்வோம். தன்னுடைய 97 வயதிலும் யோக கலையை வளர்த்துவரும் பெருந்தகையை மீண்டும் வாழ்த்தி வணங்குகிறேன்.

நன்றி, வணக்கம்
உழைப்பவரே உயர்ந்தவர்,
என்றும்அன்புடன்,

**ஆர்.சரத்குமார்**
நிறுவனத் தலைவர்